உ

திருச்சிற்றம்பலம்,

திருவருட்பிரகாசவள்ளலார்

என்னும்

சிதம்பரம்இராமலிங்கப்பிள்ளை

அவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# அருட்பா.

இஃது

சிதம்பரம்

வே, சுந்தரம்பிள்ளைகேட்டுக்கொண்டபடி

இஃது சாலைபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்,

பார்வையிடப்பட்டு.

புரசைபாக்கம்.

எழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சித்திரபானு ௵

உ

கடவுடுணை.

# இராமலிங்கப்பிள்ளை அவர்கள்

## செய்தருளியபாடல்கள்.

---

சிற்சபையும்பொற்சபையுஞ்சொந்தமென ஆச்சு
தேவர்களுமூவர்களும்பேசுவதென் பேச்சு
இச்சமயவாழ்விலெனக்கென்னவினி யேச்சு
என்பிறப்புத்துன்பமெலாமின்றோடே போச்சு

ஐயரருட்சோதிஅரசாட்சியென ஆச்சு
ஆரணமுமாகமமும் பேசுவதென் பேச்சு
எய்யுலகவாழ்விலெனக் கென்னவினி யேச்சு
என்பிறவித்துன்பமெலாமின்றோடே போச்சு

ஈசனருளாற்கடலிலேற்றதொரு வோடம்
ஏறிக்கரையேறினேனிந்ததொரு மாடம்
தேசுறுமம்மாடமடுத்தெய்வமணி பீடம்
தீபவொளிகண்டவுடன் சேர்ந்ததுசர் தோடம்

மேருமலையுச்சியில்விளங்குகம்ப நீட்சி
மேவுமதன்மேலுலகில்வீறுமர சாட்சி
சேருமதிற்கண்டபலசாட்சிகள்கண் காட்சி
செப்பலரிதாமிதற்கென்னப்பனருள் சாட்சி

சூரியமலைமேலுளதோர்ஜோதிவள நாடு
தோன்றுமதிலையர்நடஞ்செய்யுமணி வீடு
தெரியுமதுகண்டவர்கள்காணிலுயி ரோடு
செத்தவரெழுவாரென்றுகைத்தாளம் போடு

சொல்லாளப்பரியசோதிவரை மீது
தூயதுரியப்பதியில் நேயமறை யோது
எல்லாஞ்செயவல்லசித்தர்தம்மையுறும் போது
இறந்தாரெழுவாரென்றுபுறந்தாரை யூது

சிற்பொதுவும்பொற்பொதுவும்காணறிய வாச்சு
சித்தர்களுமுத்தர்களும்பேசுவதென் பேச்சு
இப்பகருமிவ்வுலகி லென்னையினி யேச்சு
எனோ பிறவித்துன்பமெலாமின்றோடே போச்சு

வலதுசொன்னபேர்களுக்குவந்ததுவாய்த் தாழ்வு

மற்றவரைச்சேர்ந்தவர்க்கும்வந்ததலைத் தாழ்வு
வலதுபுஜமாடனம்மால்வந்ததருள் தாழ்வு
மற்றுநமைச்சூழ்ந்தவர்க்கும்வந்ததுநல் வாழ்வு
அம்பலத்திலெங்களையா ராடியநல் லாட்டம்
அன்பொடுதுதித்தவருக்கானதுசொல் லாட்டம்
வம்புசொன்னபேர்களுக்குவந்ததுமல் லாட்டம்
வந்ததலையாட்டமன்றிவந்ததுமல் லாட்டம்
நாத்திகன்சொல்கின்றவந்நாக்குமுடை நாக்கு
நாக்குருசிகொள்ளுவது நாறியபிண் ணக்கு
சீர்த்திபெறுமம்பலவர்சீர்புகன்ற வாக்கு
செல்வாக்குநல்வாக்குதேவர்திரு வாக்கு
கையுறவிலாதுநடிக்கண்புருவப் பூட்டு
கண்டுகளிகொண்டுதிறந்தூண்டுநடி நாட்டு
ஐயர்மிகவுய்யும்வகையையார்விளை யாட்டு
ஆடுமென்றேமறைகள்பாடுவது பாட்டு (௰௧)

வேறு.

அருட்பெருஞ்சோதியைக் கண்டேனே
ஆனந்தவெள்ளமுற துண்டேனே

இருட்பெருமாயையை விண்டேனே
ஈனகுறைவையும் பிண்டேனே. (உ)

# திருச்சிற்றம்பலம்,

கைவிடமாட்டேனென் ஊதூது சங்கே
கலைகசையயனென் ஊதூது சங்கே
பொய்விடச்செய்தானென் ஊதூது சங்கே
பூசைபலித்ததென் ஊதூது சங்கே

தூக்கந்தொலைத்தானென் ஊதூது சங்கே
துன்பந்தவிர்த்தானென் ஊதூது சங்கே
ஏக்கங்கெடுத்தானென் ஊதூது சங்கே
ஏமசபையானென் ஊதூது சங்கே

பொன்னடிதந்தானென் ஊதூது சங்கே
பொன்னம்பலத்தானென் ஊதூது சங்கே
இன்னமுதந்தானென் ஊதூது சங்கே
என்னுளமர்ந்தானென் ஊதூது சங்கே

அச்சந்தவிர்த்தானென் ஊதூது சங்கே
அம்பலவாணனென் ஊதூது சங்கே
இச்சையளித்தானென் ஊதூது சங்கே
இன்பங்கொடுத்தானென் ஊதூது சங்கே

என்னுயிர்காத்தானென் ஊதூது சங்கே
இன்பம்பலித்ததென் ஊதூது சங்கே
பொன்னுருதந்தானென் ஊதூது சங்கே
பொற்சபையப்பனென் ஊதூது சங்கே

சிவமாக்கிகொண்டானென் ஊதூது சங்கே
சிற்றம்பலத்தானென் ஊதூது சங்கே
நவநோக்களித்தானென் ஊதூது சங்கே
நானவனானேனென் ஊதூது சங்கே

நாதமுடியானென் ஊதூது சங்கே
ஞானசபையானென் ஊதூது சங்கே
பாதமளித்தானென் ஊதூது சங்கே
பலித்ததுபூசையென் ஊதூது சங்கே

தெள்ளமுதானானென் ஊதூது சங்கே

சிற்சபையப்பனென் ஊதூது சங்கே
உள்ளமுணர்ந்தானென் ஊதூது சங்கே
உள்ளதுரைத்தானென் ஊதூது சங்கே
என்றறிவானனென் ஊதூது சங்கே

எல்லாஞ்செய்வல்லானென் ஊதூது சங்கே
செந்நிலைதந்தானென் ஊதூது சங்கே
சிற்சபையப்பனென் ஊதூது சங்கே
இறவாமையீந்தானென் ஊதூது சங்கே

எண்ணம்பலித்ததென் ஊதூது சங்கே
திறமேயளித்தானென் ஊதூது சங்கே
சிற்றம்பலத்தானென் ஊதூது சங்கே
சாவுதவிர்த்தானென் ஊதூது சங்கே

கருணைகிடைத்ததென் ஊதூது சங்கே
இரவுவிடிந்ததென் ஊதூது சங்கே
எண்ணம்பலித்ததென் ஊதூது சங்கே
எல்லாஞ்செய்வல்லானென் ஊதூது சங்கே

எல்லார்க்குநல்லானென் ஊதூது சங்கே

எல்லாமுடையானென் றூதூது சங்கே
எல்லாமுமானானென் றூதூது சங்கே

கருணாநிதியனென் றூதூது சங்கே
கடவுளவனேயென் றூதூது சங்கே
அருளுடைகத்தனென் றூதூது சங்கே
அம்பலச்சோதியென் றூதூது சங்கே

தன்னிகரில்லானென் றூதூது சங்கே
தலைவனவனேயென் றூதூது சங்கே
பொன்னியல்வண்ணனென் றூதூது சங்கே
பொதுநடஞ்செய்வானென் றூதூது சங்கே

ஆனந்தநாதனென் றூதூது சங்கே
அருளுடையப்பனென் றூதூது சங்கே
தானந்தமில்லானென் றூதூது சங்கே
தந்துவச்சோதியென் றூதூது சங்கே

பொய்விட்டகன்றோனென் றூதூது சங்கே
புண்ணியனானோனென் றூதூது சங்கே

மெய்தொட்டுநின்றேனென் றாதாது சங்

மேல்வெளிகண்டேனென் றாதாது சங்கே (ம

முற்றிற்று.

—*—

திருச்சிற்றம்பலம்.

மருந்தறியேன்மணியறியேன்மந்திரமொன்றறியே
மதியறியேன்விதியறியேன்வாழ்க்கைநிலையறியேன், இ
வறியேன்திருவருளின் செயலறியேன்றந்தான், செய
றியேன்மனமடங்குந் திறத்தினிலோரிடத்தே, இருந்
யேன் அறிந்தோரை யேத்திடவுமறியேன்எம்பிரா
னணிமன்றமெய்தவறிவேனோ, இருந்திசை சொல
பேனெங்ஙனநான்புகுவேன் யார்க்குரைப்பே னென்
செய்வேனொன்றுமறிந்திலனே. (

அகங்காரக்கொடுங்கிழங்கை யகழ்ந்தெறிய வறியே
அறிவறிந்தவந்தணர்பாற் செறியுநெறியறியேன், நகங்
ளைமுற்றுந்தவர்போல்நலம்புரிந்துமறியேன், நச்சுமரங்க
போல விச்சைகளிற்றாழ்ந்தேன், மகங்காணும்புல வ
லாம் வந்துதொழநடிக்கும் மணிமன்றந் தனையடையு

---

ஸாதாதா யென்பதற்கு-ஸாதாதா இருப்பதால்
பிட்டிவாசிக்கலாம்.

வழியுமறிவேனோ, இங்கணத்திரிகின்றேனெங்ஙநான் புகுவேன் யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந்திலனே. (௨)

கற்குமுறைகற்றறியேன் கற்பனகற்றறிந்தகருத்தர்திருக்கூட்டத்திற்களித்திருக்கவறியேன், நிற்குநிலை நின்றறியேனின்றாரினடித்தேன், நெடுங்காமப்பெருங்கடலைநீந்தும்வகையறியேன், சிற்குணமாமணி மன்றிற் றிருநடனம்புரியும், திருவடியென் சென்னிமிசைச் சேர்க்கவறிவேனோ, இற்குணஞ்செய்துழல்கின்றே னெங்ஙன நான் புகுவேன், யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந்திலனே. (௩)

தேகமுறுபூதநிலைத்திறஞ்சிறிதுமறியேன் சித்தாந்தநிலையறியேன் சித்திநிலையறியேன், யோகமுறு நிலைசிறிதுமுணர்ந்தறியேன் சிறியேன் உலகநடை யிடைக்கிடந்தேயுழைப்பாரிற்கடையேன், ஆகமுறு திருநீற்றினொளிவிளக்கஞ்சேர் அம்பலத்தேயாடுகின்றவடிவை யறிவேனோ, ஏதவழிநடையறியேனெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே. (௪)

வேதாந்தநிலைநாடி விரைந்துமுயன் றறியேன், மெய்
கையுங்கைவகையுஞ்செய்வகையுமறியேன், நாதாந்தத்
ருவீதி நடந்திடுதற்கறியேன்நானொன்றறியேனொங்
றொன்றறியேன், போதாந்தத்திருநாடுபுகவறியேன்கு
ணபூரணாகாயமெனும் பொதுவை யறிவேனோ, ஏதாம்
யேன்சரிதமெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பே
ன்னசெய்வேனேதுமறிந்திலனே. (௩

கலைமுடிவுகண்டறியேன் காரணமெலா மடக்குங், க
யறியேன்கதியறிந்தகருத்தர்களையறியேன், கொலைபுலை
ள்விடுத்தறியேன் கோபமறுத்தறியேன் கொடுங்காமக்
டல்கடக்குங் குறிப்பறியேன்குணமா, மலைமிசைநின்
டவறியேன்ஞானநடம்புரியு மணிமன்றந்தனையடையு
வழியுமறிவேனோ, இலையெனும்பொய்யுலகினிடையெ
ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பே னென்ன செய்வே
னேதுமறிந்திலனே. (௪

சாதிமதஞ்சமயமெனுஞ் சங்கடம்விட்டறியேன்,சாத்திரச்சேறுடுகின்ற சஞ்சலம்விட் டறியேன், ஆதியந்தநிலையறியேனலையறியாக்கடல்போல் ஆனந்தப்பெரும்போகத்தமர்ந்திடவுமறியேன், நீதிநெறிநடந்தறியேன் சோதிமணிப்பொதுவில் நிருத்தமிடு மொருத்தர்தனிக் கருத்தைநயறிவேனோ, ஏதிலர்சாருலகினிடை யெங்ஙன நான் புகுவேன், யார்க்குரைப்பே னென்னசெய்வ னேதுமறிந்திலனே. (எ)

சாகாதநிலையறியேன்வேகாதகாலின் தரமறியேன்போகாதபுனலினிலையறியேன், ஆகாயநிலையறியேன்மாகாயநிலையும் அறியேன்மெய்யறிந்தடங்கு மறிவுநிறைவு மறியேன், மாகாதலுடையபெருந் திருவாளர் வழுத்தும் மணிமன்றந்தனையடையும் வழியுமறிவேனோ, ஏகாயவுலகினிடையெங்ஙனநான்புகுவேன், யார்க்குரைப்பே னென்ன செய்வே னேதுமறிந்திலனே. (அ)

தத்துவமென்வயமாகத் தான்செலுத்தவறியேன், சாகாதகல்விகற்குந் தரஞ்சிறிதுமறியேன், அந்நிலை சந்த

நிலையறியேன்மெய்யறிவை யறியேன்மெய்யறிந்தடங்
றிஞரையுமறியேன், சுத்தசிவசன்மார்க்கத் திருப்பொ
வினிடத்தே தூயநடம்புரிகின்ற ஞாயமறிவேனோ,
துணையுங்குணமறியேனெங்ஙனநான்புகுவேன், யார்க்
ரைப்பேனென்னசெய்வேனோதுமறிந்திலனே. (

வளையபரமார்க்கமொடு பரமார்க்கமறியேன், மா
யந்தவிர்த்திடுசன் மார்க்கமதையறியேன், நிரையறுக
கடலறியேனக்கடலைக்கடைந்தே தெள்ளமுத முண
யேன் சினமடக்கவறியேன், உரையுணர்வு கடந்துதிரு
ணிமன்றந்தனிலே ஒருமைநடம்புரிகின்றார் பெருமைய
றிவேனோ, இவ்வுலகப்பொய்யுலகிலிடை யெங்ஙன நா
புகுவேன் யார்க்குரைப்பேனென்னசெய்வே னோதும
ந்திலனே. (

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

வானத்தின்மீது மயிலாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயில்குயிலாச்சுதடி. (௧)

துள்ளலைவிட்டுத் தொடங்கினேன்மன்றாடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
வள்ளலைக்கண்டேனடி. (௨)

சாதிச்சமயச் சழக்கைவிட்டேனருட்
சோதியைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி. (௩)

பொய்மையொழித்துப் புறப்பட்டேன்மன்றாடும்
ஐயனைக்கண்டேனடி அக்கச்சி
ஐயனைக்கண்டேனடி. (௪)

முற்றிற்று.